DINA THANTHI

14 JUNE 2023

PAGE 11



புதுவை பல்கலைக்கழகத்தில்

# நூலகர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி

புதுச்சேரி, ஜூன்.14–

இந்திய அரசின் கலாசார அமைச்சகத்தின் கீழ் உள்ள பொது நூலக பணியாளர்களுக்கான நூலகங்களுக்கான தேசிய இயக்கத்தின் திறன் மேம்பாட்டு திட்ட பயிற்சி நேற்று தொடங்கியது. பயிற்சியை பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங் தொடங்கி வைத்து பேசுகையில், நவீன தகவல் தொடர்பு தொழில்நுட்பங்களை பயன்படுத்தி பொதுநூலகங்கள் புதுப்பிக்கப்பட வேண்டும் என்றார். மேலும் புதுவையில் இதுபோன்ற பயிற்சி திட்டத்தை ஏற்பாடு செய்ததற்காக கலாசார அமைச்சகத்துக்கு நன்றி தெரிவித்தார்.

ராஜாராம் மோகன்ராய் லைப்ரரி பவுண்டேசன் இயக்குனர் ஜெனரல் அஜய் பிரதாப் சிங் பேசும்போது, கிராம பஞ்சாயத்து மட்டங்களில் நூலகங்களை நிறுவ இந்திய அரசு ரூ.5 ஆயிரம் கோடி ஒதுக்கீடு செய்துள்ளதாகவும், உள்ளூர் சமூகத்துக்கு அனைத்து வகையான தேவை அடிப்படையிலான கல்வி ஆதரவை உறுதி செய்ய முயற்சிப்பதாக குறிப்பிட்டார்.

புதுவை பல்கலைக்கழக நூலகர் விஜயகுமார், பொதுநூலக வல்லுனர்களுக்கான திறன் மேம்பாட்டு திட்டத்தின் முக்கியத்துவம் குறித்து விளக்கினார். முடிவில் புதுவை பல்கலைக்கழக ஆனந்தரங்கப்பிள்ளை நூலகத்தின் மூத்த உதவி நூலகர் பாஸ்கர் நன்றி கூறினார்.

DINAKARAN

14 JUNE 2023

PAGE 14

## புதுவை மத்திய பல்கலைக்கழகத்தின்

# சமுதாய கல்லூரியில் மாணவர் சேர்க்கை




## விண்ணப்பங்கள் வரவேற்பு

**புதுச்சேரி, ஜூன் 14:** புதுச்சேரி பல்கலைக்கழக சமுதாய கல்லூரயின் முதல்வர் (பொறுப்பு) லலிதா ராமகிருஷ்ணன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: லாஸ்பேட்டையில் உள்ள புதுவை மத்திய பல்கலைக்கழகத்தின் சமுதாயக் கல்லூரியில் 2023-24ம் கல்வி ஆண்டிற்கான இளங்கலை, முதுநிலைபட்டயம், பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கை விண்ணப்பங்கள் கடந்த 1ம் தேதி முதல் 30ம் தேதி வரை சமுதாயக் கல்லூரியின் இணையத்தளமான *http://pucc.edu.in* மூலம் விண்ணப்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. மாணவர் சேர்க்கைக்கான நேர்காணல் வருகிற ஜூலை மாதம் நடைபெறவுள்ளது. இக்கல்லூரியில் இளங்கலை கணினி பயன்பாடுகள், வணிக நிர்வாகம், உயிர் வேதியியல், ஊடகவியல், வணிகவியல், உடற்கல்வியியல் மற்றும் இளங்கலை மருத்துவத்தொழில் நுட்பப் படிப்புகளான இருதய பரிசோதனை தொழில்நுட்பம், கதிர்வீச்சு மற்றும் நிழற்பட தொழில்நுட்பம், கண்பார்வை தொடர்பான மருத்துவத்தொழில்நுட்பம், சுற்றுலா மற்றும் சேவைத் தொழில்நுட்பம், கணினி மென்பொருள் மேம்பாட்டு தொழில்நுட்பம் போன்ற படிப்புகளும், மருத்துவ ஆய்வக தொழில்நுட்பம், மருத்துவமனை செவிலியர், சுகாதார ஆய்வாளர், நோய்த்தொற்று அறிவியல், பத்திர எழுத்தர், யோகா, நாடகக்கலை, திரைப்பட நடிப்புக்கலை, இந்திய இசைக்கலை, கர்நாடக இசை (பாட்டு), பரதநாட்டியக் கலை, வரைகலை, ஓவியக்கலை, நுண்கலை மற்றும் நிகழ்த்துக்கலை ஆசிரியர் பயிற்சி, ஹிந்தி, பிரெஞ்சு, சமஸ்கிருதம், ஆங்கிலம், ஜோதிடவியல், தோட்டக்கலை, ஆடை அலங்கார வடிவமைப்பு, இயற்கை அழகு சாதனக்கலை, உடற்பயிற்சி மேலாண்மை, ஆயுர்வேத உணவுகள் மற்றும் ஊட்டச்சத்து, இயற்கை மருத்துவம் மற்றும் யோக அறிவியல் போன்றவற்றில் ஒரு வருடப்பட்டயம் மற்றும் ஆறுமாதம் சான்றிதழ் படிப்புகளும் கற்றுக்கொடுக்கப்படுகின்றன. இக்கல்லூரியில் சேர 12ம் வகுப்பில் தேர்ச்சியும், முதுநிலை பட்டயப்படிப்புகளில் சேர இளங்கலை பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மேலும் விவரங்கள் அறிய லாஸ்பேட்டையில் உள்ள புதுவை பல்கலைக்கழக சமுதாயக் கல்லூரியில் செயல்படும் மாணவர் சேர்க்கை உதவி மையத்தை நேரடியாக தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டிருந்தது.